

## அமரர். திருமதி. யோகரெட்ணம் கணேசலிங்கம்

## அவர்களின்

# 31ம் நாள் நினைவு மலர்

## 26.08.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

**உள்ளக் கமலத்தினுள்ளே......!**

அன்பின் தீபமாய் ஆசையம்மா

என்னும் அன்புணர்வுகளாய்

எங்கள் எதிர்காலநலன்களில்

எந்நாளும் நிலைந்து, ஆனைமுகத்தானை

ஆரத்துதித்த பரம்பொருளின் பாதக்கமலங்களில்

ஆத்மாசாந்தி பெற வேண்டுமென உளமார

உள்ளன்புடன் வேண்டி

பணிவன்புடன்

சமர்ப்பிக்கின்றோம்.

- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்

23 - 11 - 1938

விண்

27 - 07 - 2015



## அமரர்.

## திருமதி.யோகரெட்ணம் கணேசலிங்கம்

## திதி வெண்பா

அன்பாய் பழகினால் அதன்படி யோகமும்
நன்மை செய்யும் நோக்குண்டு எதிலுமே - நான்
உள்ளோர்க் இறங்கார் உயரம்பலனடியை
இளகிடும் பூர்வபக்க ஆடி ஏகாதசியிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



### விநாயகர் துதி
திருச்சிற்றம்பலம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர்இடர்
கடிகண பதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

## தேவாரம்

மங்கையர்க்கரசி வளவர் கோன்பாவை
வரிவளைக் கைம்மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி
பணி செய்து நாள்தொறும் பரவப்
பொங்கழலுருவன் பூதநாயகனால்
வேதமும் பொருள்களு மருளி
அங்கயற்கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவாயாவது மிதுவே

## திருவாசகம்

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே யென் கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தாய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரண்மேரு
விடங்கன் விடைப் பாகன்
பல்லாண்டென் னும் பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கிமேலாம்
நன்னெறியொழுகச் செய்துநவையறு காட்சி நல்கி
என்னையும டியனாக்கி யிருவனை நீக்கியாண்ட
பன்னிருதடந்தோள் வள்ளல்பா தபங்கயங்கள் போற்றி

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்.

## திருமதி. யோகரெட்ணம் கணேசலிங்கம்

அவர்களின்

# வாழ்க்கை வளம்

இயற்கையில் முக்கோணமாய் மூன்று மலைகள் அதைவிட பல மலைகள் இம்மாவட்டத்தில் இருப்பதால் திரிகோணமலை என்ற பெயரும் திருக்கோணேஸ்வரம் அமைந்ததாலும் செல்வம் கொழிக்கும் பூமி என்பதாலும் திருக்கோணமலை என்ற பெயரும் கொண்ட தெட்ஷணகைலாய இப் புனித மண்ணில் உயர் சைவ வேளாண் மரபில் திரு.திருமதி இராஜகோபாலபிள்ளை செல்வநாயகம் தம்பதிகளுக்கு 23.11.1938 ஆம் ஆண்டு யோரெட்ணம் பிறந்தார். சகல செல்வச் செழிப்போடு வாழ்ந்த இவர். தனது ஆரம்பக் கல்வியை திருக்கோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளீர் கல்லூரியிலும் உயர் கல்வியை யாழ்ப்பாணம் உடுவில் மகளீர் கல்லூரியிலும் கற்றார். பின் திருகோணமலை வந்து சமூகநலன்களில் ஈடுபடலானார்.

இவரது தந்தையார் பிரபல தொழில் அதிபராகவும் நகராட்சி மன்றத்தில் உறுப்பினராகவும் அதன் உபதலைவராகவும் இருந்து மக்களுக்கும் ஊருக்கும் சேவையாற்றினார் திருமணப் பருவத்தில் திரு.திருமதி.முத்துலிங்கம் பகவதிப்பிள்ளை அவர்களின் மகனும் பட்டணமும் சூழலும், மூதூர் பிரதேச செயலாளராகவும் பதவி வகித்த திரு.சி.எம்.கணேசலிங்கம் அவர்களைத் திருணமம் முடித்து முறையே ராமேஷ் (Chief Inspector of Police), பிரகாஷ்(லண்டன்) வைஜயந்தி (மக்கள் வங்கி) ஆகிய மூன்று பிள்ளைச் செல்வங்களைப் பெற்றனர். இவரது கணவர் வடகிழக்கு மாகாண அரசில் காணி, காணி அபிவிருத்தி, புணர்வாழ்வு அமைச்சராக இருந்து தன்னால் இயன்ற சேவைகளைச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி யோகம் கணேசலிங்கம் அவர்கள் திருக்கோணமலை மகளிர் அமைப்பிலும் மற்றும் பொது, ஆன்மீக நிகழ்வுகளிலும் கலந்து தன் பங்களிப்பை செய்தார். எல்லோர் உள்ளத்திலும் யோகம் என்று அன்பாக அழைக்கப்பட்டு பல்வேறு உதவிகளுக்கும் முன்னின்று செயல்பட்டவர்.

இவரது உடன் பிறப்புக்களான நாராயணபிள்ளை, நாச்சியாரம்மா, அன்னலக்சுமி கிருஷ்ணானந்தன், ரகுநாதன், ஸ்ரீகரன் ஆகியோரைப் பெற்றார். மருமக்களாக விஜயலக்சுமி (செயலாளர், பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு, கொழும்பு) சிரோமி, கு.குலேந்திரராஜா பொறியியலாளர் (ஜேக்கப்பார்க் உரிமையாளர்) ஆகியேரரை பெற்றார். பிரஷானி, பிரஷான், ஜய்கிஷன், சுஷ்மிகா, ஆகிய பேரப்பிள்ளைகளிடம் அளவு கடந்த பாசம் வைத்திருந்தார்.

அடக்கமான ஆன்மீக ஈடுபாடும் எல்லோரிடமும் அன்புடன் பண்புடன், பாசத்துடனும் சிரிப்புடன் கலகலப்பாக பழகிடும் யோகத்தின் மறைவு மன வேதனையைத் தருவதாக இருந்தாலும் எல்லாம் மாற்றத்திற்கு உட்பட்டது என மனதைத் தேர்த்திக் கொண்டு இவரது உடல் மறைந்தாலும் இவர் வாழ்ந்த காலத்தில் எத்தகைய நற்காரியங்களில் பங்கு கொண்டார் என்பதில் மகிழ்வு கண்டு அத்தகைய காரியங்களை நாமும் முன்கொண்டு செல்வதே அவருக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும். பாசம் என்ற ஒன்றுதான் எம்மை கண்ணீர் கலங்கச் செய்கின்றது.

கடந்த 27.07.2015 அன்று காலை 5.30 மணியளவில் அன்னாரின் உயர் அமைதியாக கோணேசப்பெருமானின் பாதக் கமலத்தில் சாந்தியடைந்தது.

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர்சஷ்டி கவசம்



## காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம்! நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும் நிஷ்டையும் கைகூடும்
நிமலரருள் கந்த சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

நூல்

நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக வருக மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக!
வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறு முகம்படைத்த ஐயா வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதிஎன் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க!
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!
அடியேன் வதனம் அழகுவேல் காக்க!
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க!
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தன்னைப் பெருவேல் காக்க!
முப்பத் திருபல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க!
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க!
மார்பை இரத்தின வடிவேல் காக்க!
சேரிள முலைமார் திருவேல் காக்க!
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!
பழுபதி னாறும் பருவேல் காக்க!
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க!
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க!
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க!
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வடிவேல் காக்க!
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க!
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க!
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க!
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பால் நாடியை முனைவேல் காக்க!
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க!
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க!
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் ஜாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க!
காக்க காக்க கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியில் நோக்க!
தாக்க தாக்க தடையறத் தாக்க!
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் மிருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தன்எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு!
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடாந் தோடப்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுந்துய ராங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பீரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியை
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யான்உனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமு டன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க, மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுன் மனமகிழ்ந் தருளி
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேசமு டன்ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுஉருக் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன்எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழுவர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவஓம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்



# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய் 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போ திப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைத்தீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எந்தோநின் அன்புடைமை எல்லாம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடரோ நம் சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய் 3

ஒண்ணித நிலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். 4

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 5


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய் 6

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான்ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையான் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடேலோர் எம்பாவாய். 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையேயெமக் கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையுமிலோ மேலோர் எம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதோர் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒரு தோழன் தொண்ட ருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடி யோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடீ செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகை யெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமை யேலோர் எம்பாவாய். 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்ப
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய். 12

பைங்குவளைத் கார்மலரால் செங்கமலப் பைம்போதால
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதிதிறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றெ நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான் பணியாள
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய் 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையான்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப்பொலிந்தெம் பிராட்டி திருவடி மேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவன்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்கும்நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 17


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்

விண்ணோர் முடியின் மணித்தொகை வீற்றாற்போல

கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்

தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்

பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்

விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்

கண்ணா ரமுதமுமாய்நின்றான் கழல்பாடிப்

பெண்ணேயிப்பூம்புனல்பாய்ந்தாடேலோர் எம்பாவாய். 18

உங்கையிற்பிள்ளை உனக்கே அடைக்கலமென்று

அங்கு அப்பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்

எங்கள் பெருமான் உனக்கொன்றுரைப்போங்கேள்

எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க

எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க

கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க

இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்

எங்கேழிலென் ஞாயிறெமக் கேலோர் எம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்

போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்

போற்றி யெல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்

போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்

போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்

போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்

போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்

போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய் 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய



## திருவாசகம்

### திருவாசகச் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னுந் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழியாண்ட குருமனிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க!
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவா ருன்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ரோங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடி போற்றி
சீரார் பெருந்துறை நந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன் யான்
கண்ணுதலான் தன் கருணை கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங் கொழியாய்
எண்ணிறந் தெல்லையிலாதானே நின்பெருஞ் சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே யுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்து ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கி யென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக்குக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே யென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவிஅறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

(சிவபுராணம் முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலைத் திருப்பதிகம்

திருஞானசம்பந்தர்

பண் – புறநீர்மை



1. நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

2. கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பார்
பிடியென நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ள முன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடி யிடைவைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகமாக
முன் கலந்தவர் மதில்மேல்
தனித்தபே ருருவ விழித் தழல்நாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

4. பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன்தேவி வேண்ட முன்கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடல் தரளஞ்
செம்பொனும் இப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் திரைகள் கடையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

5. தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றி சைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர் பால்நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்த வற்கருளுஞ்
செம்மையார் நம்மையாளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே

(7ம் பாடல் கிடைக்கவில்லை)

8. எடுத்தவன் தருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே.

9. அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம் ஒள் எரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்
நெறிய லாதன புறங்கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒரு பால்
மெல்லிய லொடும் உடனாகித்
துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபலமோதிக்
குன்று மொன்கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே

11. குற்றமிலாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலை யமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம்பந்தன்
உற்றசெந் தமிழார் மாலை யீரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்ற முமாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானி டைப்பொலிந்தே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காயத்திரி மந்திரம்

**1. கணேச காயத்ரி**

ஓம் ஏகதன்ஷ்ராய வித்மஹே
வக்ர துண்டாய தீமஹி
தன்னோ புத்தி : ப்ரசோதயாத்

**2. நரசிம்ம காயத்ரி**

ஓம் உக்ர ந்ருசிம்ஹாய விதமஹே
வஜ்ர நகாய தீமஹி
தன்னோ ந்ருசிம்ஹ : ப்ரசோதயாத்

**3. விஷ்ணு காயத்ரி**

ஓம் நாராயணாய வித்மஹே
வுாஸு தேவாய தீமஹி
தன்னோ விஷ்ணு ப்ரசோதயாத்

**4. சிவ காயத்ரி**

ஓம் பஞ்ச வக்த்ராய வித்மஹே
மஹாதேவாய தீமஹி
தன்னோ ருத்ர ப்ரசோதயாத்

**5. ராதா காயத்ரி**

ஓம் வருஷபானுஜாய வித்மஹே
க்ருஷ்ண ப்ரியாவை தீமஹி
தன்னோ ராதை ப்ரசோதயாத்

**6. கிருஷ்ண காயத்ரி**

ஓம் தேவகீ நந்தனாய விதமஹே
வுாஸுதேவாய தீமஹி
தன்னோ கிருஷ்ணா, ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7. கணேச காயத்ரி**

ஓம் ஏகதன்ஷ்ராய வித்மஹே
வக்ர துண்டாய தீமஹி
தன்னோ புத்தி : ப்ரசோதயாத்

**8. அக்னி காயத்ரி**

ஓம் மஹாஜ்வாலாய விதமஹே
அக்னி தேவாய தீமஹி
தன்னோ அக்னி: ப்ரசோதயாத்

**9. இந்த்ர காயத்ரி**

ஓம் ஸஹஸ்ர நேத்ராய வித்மஹே
வஜ்ர ஹஸ்தாய தீமஹி
தனனோ இந்த்ர : ப்ரசோதயாத்

**10. சிவ காயத்ரி**

ஓம் ஸரஸ்வத்யை விமதஹே
ப்ரஹம பத்னியை தீமஹி
தன்னோ தேவீ ப்ரசோதயாத்

**11. துர்க்கா காயத்ரி**

ஓம் கிரிஜாவை வித்மஹே
சிப்பிரியவை தீமஹி
தன்னோன துர்கா: ப்ரசோதயாத்

**12. அனுமன் காயத்ரி**

ஓம் அஞ்சனீ சுதாய வித்மஹே
வாயு புத்ராய தீமஹி
தன்னோ மாருதி ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. பூமா காயத்ரி

ஓம் ப்ருதீ தேவ்யை வித்மஹே
ஹைஸ்ர மூர்த்தியை தீமஹி
தன்னோ ப்ருத்வீ ப்ரசோதயாத்

## 14. சூர்ய காயத்ரி

ஓம் பாஸ்கராய வித்மஹே
திவாகாய தீமஹி
தன்னோன ஸூர்ய : ப்ரசோதயாத்

## 15. ராம காயத்ரி

ஓம் தசரதாத்மாஜாய வித்மஹே
சீதா வல்லபாயை தீமஹி
தன்னோ ராம ப்ரசோதயாத்

## 16. சீதா காயத்ரி

ஓம் ஜனக நந்தினியை வித்மஹே
பூமிஜாயை தீமஹி
தன்னோ ஸீதா ப்ரசோதயாத்

## 17. சந்த்ர காயத்ரி

ஓம் சஷீர புத்ராய வித்மஹே
அம்ருத தத்வாய தீமஹி
தன்னோ சந்த்ர : ப்ரசோதயாத்

## 18. யம காயத்ரி

ஓம் ஸூர்யபுத்ராய வித்மஹே
மஹாகாலாய தீமஹி
தன்னோ யம: ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. ப்ரஹ்ம காயத்ரி

ஓம் சதுர்முகாய வித்மஹே
ஹன்ஸாருடாய தீமஹி
தன்னோ ப்ரஹ்ம ப்ரசோதயாத்

## 20. வருண காயத்ரி

ஓம் ஜல விந்தாய வித்மஹே
நீல புருஷாய தீமஹி
தன்னோ வருண ப்ரசோதயாத்

## 21. நாராயண காயத்ரி

ஓம் நாராயண வித்மஹே
வுாஹு^தேவாய தீமஹி
தன்னோ நாராயண ப்ரசோதயாத்

## 22. துளசி காயத்ரி

ஓம் ஸ்ரீ துளஸ்யை வித்மஹே
விஷ்னு ப்ரியாவை தீமஹி
தன்னோ வ்ருந்தா ப்ரசோதயாத்

## 23. ஹன்ச காயத்ரி

ஓம் பரமஹன்ஸாய வித்மஹே
மஹா ஹன்சாய தீமஹி
தன்னோ ஹன்ச ப்ரசோதயாத்

## 24. குரு காயத்ரி

ஓம் ரிஷிபத் பஜாய வித்மஹே
ஸ்ரீனி ஹஷ்தாய தீமஹி
தன்னே குரு ப்ரசோதயாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அமரர்.

**திருமதி. யோகரெட்ணம் கணேசலிங்கம்**

எம் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எமக்கு நல்வழி காட்டி, வாழவைத்த எம் அன்பு தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியும்,பதாதைகள் , மலர்வளையம் காட்சிப்படுத்திய நிறுவனங்களுக்கும், தந்தியில் அனுதாபம் தந்தோருக்கும் தொலைபேசியில் ஆறுதல் கூறியும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், இந் நினைவு மலரின் ஆக்கத்திற்கு உதவிய என்.ஆர்.மகேந்திரன் அவர்களுக்கும் உற்றார்,உறவினர்,நண்பர்கள் மற்றும் அனைத்து நெஞ்சங்களிற்கும் எம் இதயம் கனிந்த என்றும் மறவா நன்றியை நவில்கின்றோம்.

– குடும்பத்தினர் –

இல.75, இராகவரோதயம் வீதி,
திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை நீ இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள், அது வேறொருவருடையதாகும்

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



ART 0777695656

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org